**OS. 39/2014**

**நாள். 22.09.2022.**

**வா.சா. 1 –** வீரபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்....

<u>5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பிராது சொத்து சம்மந்தமாக ஏற்படுத்தப்பட்ட மோசடி ஆவணங்களை ரத்து செய்து பிராது சொத்துக்களை நாங்கள் தடையில்லாமல் அனுபவிக்க உத்தரவு பிறபிக்குமாறு பரிகாரம் கோரியுள்ளோம். 5 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளோம். அதில் 1ம் இலக்கம் 3 ஏக்கர் 27 சென்ட். 2ம் இலக்கம் 15 சென்ட். 3ம் இலக்கம் 28 சென்ட், 4ம் இலக்கம் 3 ஏக்கர் 11 சென்ட், 5ம் இலக்கம் 1 ஏக்கர் 55 சென்ட். மேற்படி சொத்திற்குரிய பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்று வக்கீலிடம் தான் கேட்க வேண்டும். எனக்கு தெரியாது. வரி விதிப்பு ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் வரி கட்டவில்லை என்பதால் தான் ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் பேரில் பட்டா ஏதும் ஏற்படவில்லை என்றும் வரி ஏதும் செலுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்களுக்கு முன்னால் சுந்தரவள்ளி, முத்து வெயிலு, முத்து ராமு ஆகியோர் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். என் அப்பா சிவஞானம், சித்தப்பா இராமதாஸ், இரத்தினம், காமாட்சி, என் அத்தை வாழவந்தாள் ஆகியோர் பெயரில் பட்டா ஏற்பட்டது. அந்த பட்டாக்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 1929 முதல் வேலு பண்டிதர் வகையறா தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் 1973 வரை அனுபவித்தார்கள். அதற்கு பின்பு சொத்துக்கள் எங்கள் கைக்கு வந்து நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். வேலுபண்டிதர் 1954ல் இறந்த பிறகு அவரது மகன் ரங்கசாமி பண்டிதர் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 1981ல் இரங்கசாமி பண்டிதர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான மகன்கள் பூபாலன், ராமதாஸ், வேலுதாஸ் மற்றும் ஜெகதீசன் ஆகியோர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ரங்கசாமியின் மகன்கள் 4 பேரும் சேர்ந்து 19.02.2001ம் தேதியில் 1ம் பிரதிவாதி முனியசாமிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார்கள் என்றால் அது

தெரியாது. 1ம் பிரதிவாதி முனியசாமி 2ம் பிரதிவாதி இராமச்சந்திரனுக்கு 1 முதல் 3 இலக்க சொத்துக்களை 30.07.2003ம் தேதி கிரயம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. 2ம் பிரதிவாதி இராமச்சந்திரன் 06.01.2014ம் தேதி தாவா 1ம் இலக்க சொத்தை 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு 4, 5ம் பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டு அவர்களுடைய அனுபவத்தில் தான் தாவா சொத்துக்கள் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு இரங்கசாமியின் மக்கள் பவர் எழுதி கொடுத்திருப்பதில் அவர்களையும் இவ்வழக்கில் அவசிய கட்சிக்காரர்களாக சேர்க்கவேண்டும் என்று 4ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதுவரை அந்த 4 பேர்களையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் அவர்கள் 4 பேர்களுக்கும் சொத்துக்களில் பங்கு இல்லை என்று ஏற்கனவே நீதிமன்ற உத்தரவில் சொல்லிவிட்ட காரணத்தால் அந்த 4 நபர்களையும் கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த 4 பேர்கள் அனுபவத்தில் தான் பிராது சொத்துக்கள் இருந்து வந்தது என்றும் அதில் அவர்கள் 1முதல் 3 இலக்க சொத்துக்களை கிரயம் கொடுத்துவிட்ட காரணத்தால் மீதி 4 முதல் 6 இலக்க சொத்துக்கள் அவர்களுடைய கைவசத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வெள்ளைச்சாமியின் மகன் தான் இவ்வழக்கில் கண்ட 3ம் பிரதிவாதி ஆறுமுகம் என்றால் சரிதான். 2008ம் ஆண்டில் ஆறுமுகம் பரமக்குடி RDO நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் DRO விடம் அப்பீல் போட்டோம். அவர்கள் அதனை விசாரிக்கவில்லை. 3ம் பிரதிவாதி 11.07.2014ம் தேதி அவரே முன்வந்து 4, 5ம் பிரதிவாதிகள் பெயருக்கு விடுதலைப்பத்திரத்தை எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. ரங்கசாமியும் நாங்களும் ஒரே ஊர் தான். ரங்கசாமி 1960 முதல் 1967 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக (MLC) இருந்தார் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ரங்கசாமியால் நேரடியாக சென்று அனுபவிக்க முடியவில்லை என்பதால் துரைராஜ் என்பவருக்கு குத்தகைக்கு கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. குத்தகை பாத்தியத்தில் துரைராஜ் அனுபவம் செய்து வந்ததை என் தாத்தா முத்து ராமு, வெள்ளைச்சாமி ஆகியோர் இடையூறு செய்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள்

அனுபவம் ஏதும் செய்யவில்லை. துரைராஜ் குத்தகை பதிவு சட்டம் 5ன் படி முதுகுளத்தூர் தாசில்தாரிடம் மனு செய்து TR.No.3/81 20.10.1981ம் தேதி ரங்கசாமியின் உழவடைதாரர் என்று உத்தரவு பெற்றிருக்கிறார் என்றால் தெரியாது. அந்த உத்தரவை எதிர்த்து என் தாத்தா முத்து ராமு இராமநாதபுரம் RDO விடம் Rc.No.25720/B1/A6 மனு செய்துள்ளதில் 11.09.1982ல் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. 05.09.1983ல் முதுகுளத்தூர் தாசில்தார் உத்தரவு உர்ஜீதம் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. முத்து ராமு செய்த மேல் முறையீடு எனக்க தெரியாது. பரமக்குடி உரிமையியல் நீதிமன்றத்தில் OS.NO.155/78 என்ற வழக்கை துரைராஜ் என்பவர் முத்து ராமு, வெள்ளைச்சாமி ஆகியோர் மீது தாக்கல் செய்திருந்தார் என்றும் அந்த வழக்கில் ஏற்பட்ட குறுக்கு விசாரணையில் முத்து ராமு தாவா சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்று சாட்சியம் சொல்லியிருக்கிறார் என்றால் அதுபற்றி தெரியாது. அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட AS.NO.74/82 என்ற வழக்கில் துரை ராஜ் என்பவருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. AS.NO.74/82 வழக்கை எதிர்த்து முத்து ராமு என்பவர் AS.NO.1468/83 என்ற மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அந்த மேல்முறையீட்டு வழக்கில் வெள்ளைச்சாமி என்பவர் கிராஸ் அப்பீல் தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்கண்ட மேல்முறையீடு வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது வெள்ளைச்சாமியும், முத்து ராமுவும் இறந்துவிட்டார்கள் என்றால் இறந்தது தெரியும். மேல்முறையீடு பற்றிய விவரம் தெரியாது. அந்த மேல்முறையீடு வழக்குகளில் முத்து ராமு மற்றும் வெள்ளைச்சாமி வாரிசுகளை சேர்க்காததால் அந்த மேல்முறையீடு வழக்கு அபேட்மென்ட் ஆகி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் பின்பு குத்தகை பாத்தியத்தில் அனுபவித்து வந்த துரைராஜ் தாவா சொத்துக்களை ரங்கசாமியின் மக்கள் பூபாலன் வகையறாவிடம் ஒப்படைத்துவிட்டனர் என்றால் சரியல்ல. துரைராஜ் என் ஊருக்கே வந்ததில்லை. ரங்கசாமி 1973ல் சொத்துக்களை எங்கள் வகையறாவிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்படைத்துவிட்டார். இன்றுவரை 2ம் பிரதிவாதி 1ம் இலக்க சொத்தை 4, 5 பிரதிவாதிகளுக்கு 06.01.2014ம் தேதி கிரய ஆவணம் எழுதிக்கொடுத்து சொத்தை ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. 4

முதல் 6 இலக்க சொத்துக்கள் இரங்கசாமியின் மக்களான பூபாலன் வகையறாவுக்கு பாத்தியப்பட்டது என்றும் அவர்களின் பவர் ஏஜென்ட் 1ம் பிரதிவாதி மூலம் அனுபவம் செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா வழக்கினை 5 இலக்க சொத்துக்களுக்குத்தான் தாக்கல் செய்துள்ளோம். 6 இலக்க சொத்துக்கள் இல்லை. முன்பு நடந்த மேல்முறையீட்டு வழக்குகளில் என் அம்மா வெயில் அம்மாளை எதிர் அப்பீல் மேல்முறையீட்டாலராக சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால் அதுபற்றி தெரியாது. 2 முதல் 10 எதிர்மனுதாரர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மேல்முறையீட்டு வழக்குகளில் என் அம்மா நடத்தவில்லை. இதுவரை தாவா சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்பட்ட பல நீதிமன்ற தீர்ப்புகளை மறைத்துவிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் நாங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பிராது சொத்துக்களுக்கு உரிமை பாத்திய அனுபவத்தில் இருந்துவரும் கட்சிக்காரர்களையும் நாங்கள் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றும் நாங்கள் எங்களுக்கு பாத்தியமோ, அனுபவமோ இல்லாத சொத்துக்களை வைத்துக்கொண்டு விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்களுடைய வழக்கானது காலதாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(6 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)